**கவனிக்க.-** 2006.07.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1455 - 2006 ජූලි 21 වැනි සිකුරාදා - 2006.07.21

1455 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 652 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 652 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) கண்டிய திருமணம், மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) சூதாட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூலை 28 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூலை 14 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தில் என்னால் வழங்கப்பட்ட அதிகாரத்தை இரத்துச் செய்தல்

யப்பான் 949-2233, ஒஆசா, மியோகோசி, பின்டென், கம்னத முரா 803, நீகதாலதன் எனும் இடத்தில் வசித்து தற்போது பாணந்துறை, வேரவத்த, மிஹிந்து மாவத்தை, இல. 25/38 எனும் இடத்தில் வசிக்கும் உசீடா உம்மு ரஹீமா (தே. அ. அ. இல. 627002254 V) எனும் நான், தாரலுவ (N. W. P.), இல. 60/174 இல் வசிக்கும் வன்னிஆரச்சிகே தொன் பமர்வின் ஸ்டான்லி (தே. அ. அ. இல. 550551098 V) என்பவரை எனது அட்டோர்ணி தத்துவக்காரராக நியமித்து யப்பான் நிகதாதென், நதாதுபினி துன்டகம்னே மியோனொமுரு, ஒசாகயா, தொகியா 949-22 விலாஹோ சிபே இல் வசிக்கும் உசிடோ சாடோ பகிரங்க நொத்தாரிசுவினால் உறுதிப்படுத்தப்பட்ட 2004.04.03 ஆந் திகதிய அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்வதாக இத்தால் சகலருக்கும் அறியத்தருவதுடன் மேற்படி அட்டோர்ணி தத்துவத்தின் கீழ் இதற்குப் பிறகு என் சார்பாக அவரால் மேற்கொள்ளப்படும் எந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உசிடா உம்மு ரஹீமா.

7-279

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, நெதிமாலை, பெப்பிலியான வீதி, இல. 54 ஐச் சேர்ந்த லீலானந்த நாணயக்கார வேறகொட மற்றும் லதா லக்ஷ்மி ஜயவர்தன ஆகிய நாம், அங்கொடை, கொத்தட்டுவ, அவிசாவளை வீதி, இல. 12 ஐச் சேர்ந்த சித்ரா தமயன்தி விக்கிரமசிங்ஹ என்பவருக்கு வழங்கப்பட்ட, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான தயா மஹிந்த விக்ரமரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1996, சனவரி 29 திகதியிடப்பட்ட அட்டோர்ணித் தத்துவ இல. 1251 ஐ இன்றிலிருந்து பயனுறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றோம் என இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

லீலானந்த நாணயக்கார வேறகொட
மற்றும்
லதா லக்ஷ்மி ஜயவர்தன.

7-332

---

## அட்டோர்ணித் தத்துவப் பத்திரத்தை ரத்துச்செய்தல்

தபால் பெட்டி இல. 23831 சஃபாட் 13099 குவைட் இல் வசிக்கும் தாரிக் தௌபீக் ரி அல் நாகிப் ஆகிய நான், கொழும்பு 5, அமரசேகர மாவத்தை, இல. 24/1 இல் வசிக்கும் நிரோஸ் மஹிலால் த சில்வா என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட, கந்தையா நீலகண்டன் கொழும்பு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2005 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 ஆந் திகதி என திகதியிடப்பட்டதுமான 1674 ஆம் இலக்க அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தினை ரத்துச் செய்துள்ளதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட நிரோஸ் மஹிலால் த சில்வா என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

தாரிக் தௌபீக் ரி அல் நாகிப்.

2006.07.05.

7-319

---

# ஏல விற்பனைகள்

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி-கிராண்பாஸ் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக வளவுகள் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். பாலகிருஷ்ணன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 பெப்புருவரி 16 ஆந் திகதியிடப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இல் குறிப்பிடப்பட்டதும் பஞ்சிகாவத்த வீதி, வரிமதிப்பு இல. 228 ஐக் கொண்டதும் தரைத் தளத்தில் கூறுகள் 2 என அடையாளமிடப் பட்டதுமாகும்).**

**(காணியின் விஸ்தீரணம் : 1623.87 ச. அடி)**

**தனது உட்பிரவேசிக்கும் வழி ஏயூ2 இன் உடன் பொது இடப்பரப்பாக கொண்ட மற்றும் சொல்லப்பட்ட கூறு 2 இன் எல்லைகளாவன- வடக்கு : வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ (பஞ்சிகாவத்தை வீதி) ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் ஏயூ2 (படிக்கட்டு சாலை); கிழக்கு : சீஈ2 (தோட்ட வெளி) இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; தெற்கு : சீஈ1 தோட்ட வெளியிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் கூறு 1 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு : பஞ்சிகாவத்தை வீதி வழியே பாதசாரி நடைபாதையிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறுகளுக்கு மேலாகவுள்ள கூறு 3 இன் தரையின் மத்தி ; இடை : இக்கூறின் தரைத்தளம். இது சொல்லப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய, பொது மூலகங்களின் விகிதமுறையான பங்கு 18.38% ஐக் கொண்டது ; கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு கூட்டாட்சி ஏக 32/37 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**பொது மூலகங்கள் :**

**(1) கட்டிடம் அமைந்துள்ள இக்காணி**

**(2) பக்கம் 3 (தோட்ட வெளியாய் இருக்கின்ற சீஈ) இல் தரை தளத்தில் காட்டப்பட்ட சீ. ஈ. 1 (மஞ்சள் நிறத்தினால் ஓரங்கள்**

***இடப்பட்ட) என அடையாளமிடப்பட்ட காணியின் மிகுதிப் பாகங்கள், சீஈ 2 (நீல நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட மற்றும் சீஈ 3 பச்சை நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட)***

***(3) இக்கட்டிடத்தின் அடித்தளங்கள், தூண்கள், இரும்புத் தூண்கள், உத்தரங்கள், தாங்கிகள், பிரதான சுவர்கள் மற்றும் கூரை***

***(4) (i) ஏயு 1 முதலாம் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 3 மற்றும் கூறு 4 வரை***

***(ii) ஏயு 2 தரை தளம் (இதன் பக்கம் : 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாம் தள வரைபடம் மற்றும் இரண்டாம் தள வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள துணைக் கூறுகளுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கின்ற ஏயூ 1 மற்றும் ஏயூ 2) இல் படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 2 வரை***

***(5) இக்காணிக்குள் கால்வாய்களுக்கான இடப்பரப்பு***

***(6) இக்கட்டிடத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட வேறு வசதிகள்***

***(7) மண் சாக்கடை சேவைகள் :***

***(8) (i) தரைதளம் சீஈ 1 இலிருந்து கூறு 1 வரை***

***(ii) தரைதளத்தில் சீஈ 2 இலிருந்து கூறு 2 வரை, முதலாவது தளத்தில் கூறு 3 மற்றும் இரண்டாவது தளத்தில் கூறு 4 (இதன் 3 ஆம் பக்கத்தில் தரைதள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பொது மூலகங்கள், ஒதுக்குகள் சீஈ1, சீஈ2 மற்றும் சீஈ3 ஆகும்.)***

***(iii) தரை தளத்திலுள்ள கூறுகள் 1 மற்றும் 2 இற்கு சீயூ3.***

***துணை கூறு :***

***கூட்டாட்சி வரைபடம் இல. 431 (கூட்டாட்சி ஆதனத்தில் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனக் கட்டிடத்தின் உள்ளிருந்தும் புறமுமாக) இன் பக்கங்கள் 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாவது தள வரைபடம் மற்றும் இரண்டாவது தள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துணை கூறு ஏயூ 2 முழுவதும். இதன் விஸ்தீரணம் 200 ச. அடி ஆகும். கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய கூறு ஏயூ 2 இன் எல்லைகளாவன- வடக்கு : வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ, பஞ்சிகாவத்தை வீதி) ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; கிழக்கு : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் சீஈ2 இன் மீதான இடப்பரப்பு (தோட்ட இடப்பரப்பு) ; தெற்கில் : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு : கூறுகள் 2, 3, 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறின் கூறை ; இடை : இக்கூறின் தரைத்தளம்***

***அத்துடன்***

***முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் அளுத்கடை கிழக்கு ஸ்ரீ சங்கராஜ மாவத்தை (முன்னர் ஸ்கின்னர்ஸ் வீதி தெற்கு என அறியப்பட்ட) வழியே அமைந்துள்ளதும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரிமதிப்பு இல. 215/1 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். இராஜேந்திரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1964 ஒகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2967 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 8 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது)***

***(காணியின் விஸ்தீரணம் : 3.25 பேர்ச்சுக்கள்)***

***ஏல விற்பனை***

*(கடப்பாடுடையவர்/ஈடுவைத்தவரான கொழும்பு 10 இல் "பந்துல ரிரேடிங் என்ரபிரைஸஸ்" எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின் கீழ் ஏக உரிமையாளராக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கலஹேனகே அஜித் பந்துலசேன, 1995.11.17 திகதியிடப்பட்ட முறி இல. 698, 1995.05.03 திகதியிடப்பட்ட முறி இல. 3255, 1993.07.21 திகதியிடப்பட்ட முறி இல. 1203, 1995.06.21 திகதியிடப்பட்ட முறி இல. 3346, 1993.11.05 திகதியிடப்பட்ட முறி இல. 1492 மற்றும் 1993.09.09 திகதியிடப்பட்ட முறி இல. 1342 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006, ஒகத்து 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***– 2000.07.21 ஆந் திகதி அரசாங்க வர்த்த மானியையும் 2000.07.12 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் 2000.07.26 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் மற்றும் விற்பனை அறிவித்தலுக்கு 2006.07.21 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்:**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(5) ரூபா 44,645 விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 4,000.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களை யும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் டவர்ஸ்', 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, பிரதிப் பொது முகாமையாளர் - சட்டசம்பந்தமான பகுதி" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 074-701256-7, 074-701291, 2456258.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.
தொலைபேசி இல. : 2591167
தொலைபேசி/தொலைநகல் இல. : 2584874, 250038
துரித அழைப்பு : 0772-250422

7-385

**செலான் வங்கி லிமிட்டெட் - சரிக்காமுல்லைக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**ஆதனம் ஏல விற்பனை**

கணக்கு இல. : 0400-03530574-001

*(கடன்பட்டார் என்ற வகையில் பாணந்துறையைச் சேர்ந்த அமீர் லெப்பை முஹம்மது காமில் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கு செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி)*

மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**ஆதனத்தின் விவரணம்.**- மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே, தல்பிட்டி, தெபெத்த, பாணந்துறை, பாணந்துறை பிரதேச சபை உப பிரிவில் கெசெல்வத்த பகுதி, தொட்டவத்தை, முகவர் வீதியில் இல. 25/12 இல் அமைந்துள்ள கஜுகஹவத்த அல்லது கஜுகஹஒவிட்ட என்றழைக்கப்படுகின்றதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜி. மலவென்னவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் 1997, ஒற்றோபர் 25 ஆந் திகதி வரைவு இல. 1016 உடைய துண்டு இல. 1, 0ஏக்கர். 0றூட். 8.21பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட பெறுமதிவாய்ந்த காணி, கட்டிடங்கள், மரம், செடி, கொடிகள் அடங்கலாக அனைத்து சொத்துக்களும் குறித்த இல. 1016 வரைவு இல. எப் 329/134 இன்கீழ் பாணந்துறை காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2004.04.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.05.10 ஆந் திகதிய "டெய்லி மிரர்", "லங்காதீப்ப" மற்றும் 2006.04.24 ஆந் திகதிய "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- கெசெல்வத்தை சந்தியிலிருந்து காலி வீதி ஊடாக சுமார் 400 மீற்றர் தூரம் பள்ளிமுல்லை சந்திவரை சென்று இடது பக்கமாகத் திரும்பி ஸ்ரீ சங்கரத்ன மாவத்தை ஊடாக சுமார் 700 மீற்றர் தொடர்ந்து வத்தல்பொல சந்திவரை சென்று இடது பக்கம் திரும்பி வேரவத்த வீதி ஊடாக சுமார் 600 மீற்றர் சென்று மூவர் வீதி பக்கம் திரும்பி சுமார் 400 மீற்றர் தூரம் சென்று குறித்த காணியைச் சென்றடையலாம்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும்:-

கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ; ஏலதாரர் கட்டணமாக 2 1/2 (இரண்டரை வீதம்); விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு,

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2456284, 2456285, 2456263.

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரரும்,
நீதிமன்ற ஆணையாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்ஷன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல. : 2696155, 2572940

6-383

---

**றுஹுணு அபிவிருத்தி வங்கி - தல்கஸ்வல கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**ஆதனம் ஏல விற்பனை**

றுஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழ் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகள் 2006.08.15 ஆந் திகதி பி. ப. 11.30 மணிக்கு உரிமைகள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படவுள்ளது.

**அடகு வைக்கப்பட்டுள்ள உரிமைகள் பற்றிய விவரணம்**

தென் மாகாணத்திலே காலி மாவட்டத்தில் ஹினிதும் பத்துவ வதுவேலயில் அமைந்துள்ள புஸ்ஸேஹேன அல்லது வத்த அத்தர கும்புர கொடல்ல எனும் ஒரு ஏக்கர் (01ஏ. 0றூ. 0பே.) பெரிய முக்கோண வடிவான காணியின் நிலமும் அதனுள் அமைந்துள்ள மரங்களும் பழங்களும் ஆகியன எல்லாம் உட்படவுமாகும்.

**மேலதிக விவரங்களுக்கு.**- 2006.01.12 ஆந் திகதியுடைய வர்த்தமானியிலும் 2006.04.25 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த அய்லன்ட்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ள ஏல விற்பனை பகுதிக்கு அவதானம் செலுத்தவும்.

**காணிக்கு உட்பிரவேசித்தல்.**- உடுகம நகரத்திலிருந்து அகுரெஸ்ஸ வீதியால் தவலம சந்தியைத் தாண்டி 500 மீட்டர் செல்லும்போது சந்திக்கும் தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள வீதியில் 1/2 கி. மீ. செல்லும்போது இக்காணி அமைந்துள்ளது.

**செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ப்பாகியவுடன் கீழ் காணும் விலைக்கு வாங்குபவர்கள் பணம் செலுத்த வேண்டும் :-

(1) வாங்கும் விலையின் 10% உம் ;
(2) மாகாண அதிகாரியின் வரிக்காக மாகாண அதிகாரிக்கு விற்கும் விலையின் 1% உம் ;
(3) ஏலவிற்பனையாளரின் தரக்குக் கூலி சார்பாக வாங்கும் விலையின் 2 1/2% உம் ;

(4) எழுதுவினைஞர், அறிவித்தல் ஆகியவற்றிற்காக கூலியாக ரூபா 500 உம் ;

(5) விற்பனைச் செலவும் ஏனைய கூலிகளும் இருப்பின் அவைகளும்.

வாங்கிய விலையின் மீதி 90% ஆகிய பணம் ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பம்புரன, அநாகரிக தர்மபால மாவத்தை, இல. 382ஏ உடைய இடத்தில் அமைந்துள்ள றுஹுணு அபிவிருத்தி வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் அதிகாரிக்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 30 நாட்களுக்குள் உரிய பணத்தை செலுத்தாவிடில், தற்போது செலுத்தியுள்ள வாங்கும் விலையின் 10% பணத்தை மீளக் கொடுக்காமலிருப்பதற்கும், மீண்டும் காணியை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமையுடைய காணி உறுதியும் மற்றும் ஏனைய விவரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 041- 2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், வரிமதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041- 2228731.

7-305

---

**மக்கள் வங்கி - மெனிக்ஹின்ன கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பரை உடகம்பஹா கோறளை, குரகன்தெனியவில் அமைந்துள்ள "பிலின்வகஹமுலவத்த" என்றழைக்கப்படும் காணியை நிலஅளவையாளர் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட PPA/3106 இலக்கங் கொண்ட முலவரைபடத்தில் 12 ஆம் லொட் இலக்கத்தைக் கொண்ட முப்பத்தெட்டு தசம் சைபர் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 38.07பே.) விசாலமுள்ள காணியும் மாடி வீடும் ஏல விற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2006.08.24 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனங்கள் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

2003.11.07 ஆந் திகதிய இலங்கை அரச வர்த்தமானியிலும், 2004.12.15 ஆந் திகதிய "டேய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏலவிற்பனை தீர்மான அறிவத்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்துக்கு நுழையும் வழி.**- மெனிக்ஹின்ன கிராமிய வங்கிக்கு அருகில் பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் பாதையில் 1/4 மைல் அளவில் சென்ற உடன் பாதையின் வலது பக்கத்தில் மேற் கூறப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை இறுதியின் போது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பணத்தில் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% உம் ;

(2) மாகாண அதிகார சபைக்கு குத்தகையாக மாகாண அதிகார சபைக்கு1% உம் ;

(3) ஏலதாரரின் கொமிஸ் தொகையாக விற்பனை விலையின் 2 1/2% உம் ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 உம் ;

(5) விற்பனைச் செலவும் விற்பனை சான்றிதழுக்காக முத்திரைக் கட்டணமும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப்பணத் தொகையும் ;

கொள்வனவு விலையின் 90% வீதமான தொகையும், விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பிரதேச பிரதம அலுவலகம், அநுராதபுரம், மக்கள் வங்கி கிளைக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 081-2234283, 081-2223017.

உரிமை ஒப்பனைகளும் ஏனைய விபரங்களும் மக்கள் வங்கி, மேற் குறிப்பிட்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்கு செலுத்தாவிட்டால், தற்போதைய செலுத்தப் பட்டிருக்கும் கொள்வனவு விலையின் 10% பணத்தொகையை மீளக் கொடுக்காமல் இருப்பதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஷொக்மன் அன்ட் சமரவிக்கிரம,
இலங்கையில் முன்னணியில் திகழும்
அதிகாரம் பெற்ற ஏலதாரர்கள்
(அரச தனியார் வங்கியாளர்களுக்காகவும்
நீதிமன்ற ஆணையாளர்களுக்காகவும்)

| நகர அலுவலகம் : | தலைமை அலுவலகம் : |
|---|---|
| 55ஏ, தர்மபால மாவத்தை, | 24, டொரிங்ரன் வீதி, |
| கொழும்பு 3, | கண்டி. |
| தொலைபேசி : 011-2448536, 011-2441761 011-2448526 | தொலைபேசி : 081-2224371 081-2227593 |
| | தொலைநகல் : 081-2224371 |
| | மின் அஞ்சல் : samera@sri.lanka.net |

7-327

**மக்கள் வங்கி – கொபேகனே கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான விற்பனை*

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவ, பலதொர கோறளை, கொபேகனே என்ற கிராமத்தில் அமைந்துள்ள "வனோஹோ" தற்போது தோட்டம் என்ற காணிக்கு அளந்து தயாரிக்கப்பட்ட 5509 ஆம் இலக்க வரைபடத்தின் 1 ஆம் இலக்க காணி பரப்பளவு மூன்று தசம் ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.9பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.08.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2005.04.15 ஆந் திகதிய இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2005.07.14 ஆந் திகதிய "டேய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**– கெபேகனே பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**– ஏலவிற்பனையின் முடிவின்போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :–

(1) தாம் வாங்கிய விலையின் 10% ஐயும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும் பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனைத் தொகையின் 2 1/2% கமிசனையும் ;

(4) எழுதுவிளைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும்

விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. 037-2222453, பெக்ஸ் இல. 037-2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களைக் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% ஐயும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. 037-2220062.

7-328

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.